'டம்மி' முதல்வர் செல்லும் இடங்களில் எல்லாம் பிரச்சினை!

கால் வைக்கும் இடமெல்லாம் கன்னிவெடி!

லிஸ்ட் போட்ட நெட்டிசன்கள்!

சென்னை, அக். 29 -

முதல்வர் விஜய் செல்லும் இடங்களில் எல்லாம் அசம்பாவிதம் நடக்கிறது என சமூகவலை தளங்களில் ஒரு கருத்து வைரலாகி வருகிறது.

அதிலும் சில சம்பவங்களை குறிப்பிட்டு விஜய்யின் "ராசி" குறித்து நெட்டிசன்கள் பட்டியலிட்டுள்ளதை பார்க்கலாம்.

தமிழகத்தில் விஜய் ஆட்சிக்கு வந்தது முதலே விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்டவை நடந்து வருகின்றன என எதிர்க்கட்சிகள் குறை கூறி வருகிறார்கள்.

அந்த வகையில் முதல்வர் விஜய் எங்கெல்லாம் ஆய்வுக்கு செல்கிறாரோ அங்கெல்லாம் அசம்பாவிதம் நடைபெறுவதாக நெட்டிசன்கள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனையில் ஆய்வு

முதல்வராக பொறுப்பேற்றதும் விஜய், கடந்த ஜூலை 8ஆம் தேதி எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு பிரசவ வார்டில் பிறந்த குழந்தைகளை தூக்கி கொஞ்சினார்.

மருந்து தட்டுப்பாடு

இதையடுத்து செப்டம்பர் மாதம் சென்னை, தேனி, தருமபுரி, திருப்பூர், கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் குறை மாதத்தில் பிறக்கும் பச்சிளம் குழந்தைகளின் உயிரை காக்க பயன்படுத்தப்படும் சர்ஃபாக்டன்ட் என்ற மருந்து தட்டுப்பாடு எழுந்தது.

போதை ஒழிப்பு

கடந்த ஜூன் 25ஆம் தேதி சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தினத்தையொட்டி தமிழக முதல்வர் விஜய், "Start Run, Stop Drugs" என்ற போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை தொடங்கி வைத்தார். பொது மக்களுடன் சேர்ந்து 6 கி.மீ. ஓடி அசத்தினார்.

இதையடுத்து கடந்த அக்டோபர் 18ஆம் தேதி, தமிழகத்தில் ரூ 100 கோடி மதிப்பிலான 137 கிலோ மெத்தபெட்டமைன் எனும் போதை பொருளை டிஆர்ஐ பறிமுதல் செய்தது. இந்த சம்பவத்தில் தவெக மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்த பூபாலன் உள்ளிட்ட 5 பேரை வருவாய் புலனாய்வு குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

புழல் சிறை கைதிகள்

அது போல் கடந்த ஆகஸ்ட் 28 ஆம் தேதி சென்னை புழல் சிறையில் முதல்வர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டிருந்தார். அங்கு சிறை கைதிகளுக்கான உணவின் தரம், பாதுகாப்பு ஏற்பாடுகள், அவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த நிலையில் கடந்த 22 ஆம் தேதி புழல் சிறையில் இருந்த நேபாளத்தைச் சேர்ந்த சுதீப் போகாது, போக்சோ வழக்கில் ஆயுள் தண்டனை கைதி சுரேஷ் ஆகியோர் தப்பிய நிலையில் அவர்களை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மின் கொள்முதல்

தமிழகத்தில் அடிக்கடி மின் தடை பிரச்சனை எழுந்திருந்த நிலையில் செப்டம்பர் 23 ஆம் தேதி விஜய், அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய தலைமையகத்திற்கு சென்றார். அங்கு மின்னகம் நுகர்வோர் சேவை மையம் உள்ளிட்டவை குறித்து பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தடையில்லா மின்சாரம்

தமிழகத்தின் தற்போதைய மின்தேவை, உற்பத்தி மற்றும் மின் கொள்முதல் நிலவரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் கிடைக்கும் மின்சாரம் அதிகரித்து வரும் நிலையில் மின் தேவையை சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும் தமிழகத்தில் தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மின்னகத்தில் விஜய்

அவர் மின்னகத்திற்கு போனாலும் போனார், மின் தடை மேலும் அதிகரித்து ஒரு யூனிட் மின்சாரத்தின் கொள்முதல் விலை கடந்த அக்டோபர் 12 ஆம் தேதி முதல் அக்டோபர் 31 ஆம் தேதி வரை ரூ 35 ஆக உயர்த்தப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இப்படியாக விஜய் செல்லும் இடங்களில் எல்லாம் அசம்பாவிதம் நடப்பதாக நெட்டிசன்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

கடைசியாக அவர் செம்பரம்பாக்கம் ஏரியை நேற்றைய தினம் பார்வையிட்டு, அதன் நீர் மட்டம் குறித்தும் கரைகளின் வலிமை குறித்தும் கரையோர மக்களுக்கான பாதுகாப்பு குறித்தும் கேட்டறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சையத் முனீர் ஹோதா அவர்களின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர ராஜா ஆகியோர் உள்ளனர்.

நிர்வாகத் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட

சையத் முனீர் ஹோதா ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 29 -

நிர்வாகத் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சையத் முனீர் ஹோதா இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது :-

முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி திரு. சையத் முனீர் ஹோதா அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவரது இல்லத்திற்குச் சென்று, இறுதி மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தேன்.

1976ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியில் இணைந்த அவர், தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், மாநிலத் தேர்தல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்து, நீண்டகாலம் அரசுப் பணியாற்றியவர். தலைவர் கலைஞர் அவர்களின் முதன்மைச் செயலாளராகப் பணியாற்றியவர்; என்னிடமும் அன்பொழுகப் பழகியவர்.

மெட்ரோ ரயில் பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தியவர்!

தி.மு.க. ஆட்சியின் சாதனையாக, சென்னை மாநகரத்தின் இரத்தநாளங்களைப் போல் விரிவடைந்து கொண்டிருக்கும் மெட்ரோ ரயில் திட்டத்தின் பணிகள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதற்கு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதல் மேலாண் இயக்குநராகத் முனீர் ஹோதா அவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

நிர்வாகத் துறையில் பல ஆண்டுகால அனுபவம் கொண்ட திரு. முனீர் ஹோதா அவர்களின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

குற்றவாளிகளைக் கண்காணிப்பதிலும் சிறைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் த.வெ.க. அரசு தோல்வி!

ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு இணையாகப் புகழப்படும் தமிழ்நாடு காவல்துறைக்கு பெரும் தலைகுனிவு!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் சாடல்!

சென்னை, அக். 29 -

'தினகரன்' நாளேடு 28.10.2026 தேதிய இதழில் தலைகுனிவு எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு :-

தமிழக சிறைத்துறை வரலாற்றில் சுமார் 31 ஆண்டுகளுக்குப் பின் அதிர்ச்சி சம்பவம் தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் அரங்கேறியுள்ளது. 1989ம் ஆண்டு ஆகஸ்ட் 21ம் தேதி சென்னை சிறையில் இருந்த பிரபல கொலைக்குற்றவாளியான ஆட்டோ சங்கர் தப்பி ஓடி, ஒடிசா மாநிலம் ரூர்கேலாவில் பிடிபட்டார் இது சிறை நிர்வாகம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதையடுத்து அமைக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் ஆணையம், சிறை நிர்வாகத்தில் இருந்த குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்தது. சென்னை மத்திய சிறையை நகருக்கு வெளியே மாற்ற வேண்டும் என்ற பரிந்துரை அப்போது முன்வைக்கப் பட்டது.



தினகரன்

அக்டோபர் 28, 2026 புதன்கிழமை

தலைகுனிவு

தமிழக சிறைத்துறை வரலாற்றில் சுமார் 31 ஆண்டுகளுக்குப் பின் அதிர்ச்சி சம்பவம் தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் அரங்கேறியுள்ளது. 1989ம் ஆண்டு ஆகஸ்ட் 21ம் தேதி சென்னை சிறையில் இருந்த பிரபல கொலைக்குற்றவாளியான ஆட்டோ சங்கர் தப்பி ஓடி, ஒடிசா மாநிலம் ரூர்கேலாவில் பிடிபட்டார். இது சிறை நிர்வாகம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதையடுத்து அமைக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் ஆணையம், சிறை நிர்வாகத்தில் இருந்த குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்தது. சென்னை மத்திய சிறையை நகருக்கு வெளியே மாற்ற வேண்டும் என்ற பரிந்துரை அப்போது முன்வைக்கப்பட்டது. 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் வேலூர் மத்திய சிறையில் 6-வது பிளாக்கில் அடைக்கப்பட்டிருந்த 8 ஆயுள் தண்டனைக் கைதிகள் சிறை அறையின் மேற்கூரை ஓடுகளை அகற்றி, அருகிலிருந்த

1991ம் ஆண்டு நவம்பர் மாதம் வேலூர் மத்திய சிறையில் 6வது பிளாக்கில் அடைக்கப்பட்டிருந்த 8 ஆயுள் தண்டனைக் கைதிகள் சிறை அறையின் மேற்கூரை ஓடுகளை அகற்றி, அருகிலிருந்த பொருட்களைக் கொண்டு ஏணி தயாரித்து தப்பினர். இதுதொடர்பான ஒரு வழக்கில் சிறைக் காவலர்களின் கடுமையான அலட்சியமே இந்தச் சம்பவத்திற்குக் காரணமாக அமைந்ததாக நீதிமன்றம் கண்டித்திருந்தது.

1995ம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் தேதி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு எதிரே இருந்த மத்திய சிறையில் தடா சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் 9 பேர் போலீசாரை தாக்கி, சிறையின் சுவரைத் தாண்டித் தப்பினர்.

வேலூர் கோட்டையில் உள்ள திப்பு மஹால் வளாகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட 43 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் உரிய பயண ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவுக்கு வந்ததாகத் தடுத்து வைக்கப்பட்டவர்கள். இது வழக்கமான சிறைச்சாலை அல்ல. வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்புத் தடுப்பு முகாம். 1995ம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி இந்த முகாமிலிருந்து 43 பேரும் தரைமட்டத்திலிருந்து சுமார் 10 அடி ஆழத்தில் 153 அடி நீளத்துக்குச் சுரங்கம் தோண்டி கோட்டையைச் சுற்றியிருந்த அகழியையும் கடந்து தப்பினர். இவர்களில் 11 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மற்றவர்கள் இலங்கைக்குத் தப்பிச் சென்றனர். இந்த விவகாரம் நாடாளுமன்றம் வரை எதிரொலித்தது.

கடந்த 20, 21 தேதிகளில் சென்னை புழல் மத்திய சிறையிலிருந்து அடுத்தடுத்து 2 கைதிகள் தப்பிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தற்போது தேனி மாவட்டம் தேக்கம்பட்டி சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியுள்ளனர். முந்தைய சம்பவங்களில் சுரங்கம் தோண்டுவது, மேற்கூரையை உடைப்பது, காவலர்களைக் கட்டிப்போடுவது போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் தேனியில் சினிமா பாணியில் கைதி ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டதாக நாடகமாடி, சிறைக் காவலரைத் தாக்கிவிட்டுத் தப்பியுள்ளனர். சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடியதாகக் கூறப்படும் நேரத்திற்கும், இதுகுறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நேரத்திற்கும் அதிக இடைவெளி இருப்பது இந்த நிகழ்வு குறித்த பல ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் குற்றவாளிகளைக் கண்காணிப்பதிலும் சிறைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் மக்களே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தமிழகம் சென்றுவிட்டதாகவும் முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களும் விமர்சித்துள்ளனர். ஸ்காட்லாந்து யார்டு போலீசாருக்கு இணையானவர்களாக புகழப்படும் தமிழக காவல்துறைக்கு இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது பெரும் தலைகுனிவுதான்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருத்தணி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றியங்களில் கழக மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் திருத்தணியில் நடைபெற்றது இதில். தலைமை கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, ப.அப்துல் மாலிக் ஆகியோர் பங்கேற்று ஒன்றியங்களில் கழக அமைப்புகளை வலுப்படுத்துதல், கிளைக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல், நிர்வாகிகளின் பணிகளை ஆய்வு செய்தல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் குறித்து ஒன்றியக் கழக நிர்வாகிகளுடன் தலைமைக்கழகப் பிரதிநிதிகள் ஆலோசனை மேற்கொண்டனர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

'சிறைச் சரித்திரம்' படைக்கும் 'டம்மி' விஜய் ஆட்சியில்

சேலம் காவல் நிலையத்திலும் கைதிகள் தப்பி ஓட்டம்!

செயலிழந்து தவிக்கும் சட்டம் — ஒழுங்கு!

சேலம், அக். 29 -

சேலம், ஆட்டையாம்பட்டி போலீஸ் ஸ்டேஷனில், 15க்கும் மேற்பட்ட வழிப்பறி, அடிதடி, கொலை வழக்குகளில் தொடர்புடைய, 'ஏ' கிரேடு குற்றவாளிகளான ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த பிரபு, சந்தோஷ் குமார், முத்தனம்பாளையத்தைச் சேர்ந்த தேவராஜ் ஆகிய மூவரை கைது செய்து, ஸ்டேஷனுக்கு கொண்டு வந்தனர்.

ஸ்டேஷனில் போலீசார் தேவர் ஜெயந்தி விழா பாதுகாப்பு பணிக்குச் சென்ற நிலையில், குறைந்த போலீசார் மட்டுமே பணியில் இருந்தனர். ரவுடிகளிடம் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த, மாலை ஜீப்பில் ஏற்றிச் செல்ல முயன்றனர்.

அப்போது, பிரபு, சந்தோஷ் குமார் ஆகியோர் கழிப்பறை செல்ல வேண்டும் என கூறியதால், ஸ்டேஷன் பின்புறம் உள்ள கழிப்பறைக்கு செல்ல அனுமதித்தனர். கண்ணிமைக்கும் நேரத்தில் இருவரும், ஸ்டேஷன் சுற்றுச்சுவரை தாண்டி குதித்து தப்பி ஓடினர். தப்பி ஓடியவர்களை பிடிக்க தனிப்படை அமைத்துள்ளனர்.

தேனி சிறையில் கைதி போலீஸ் ஸ்டேஷனில் தப்பியது, சேலத்தில் கள் தப்பிய நிலையில், இருந்து இரு கைதிகள் பரபரப்பை ஏற்படுத்தியது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; கலெக்க்ஷின்' குமார் கிட்ட இருக்குற மின்துறை தான் ஒரே குளறுபடியா இருக்குன்னா, இந்த சிறைத் துறையும் கேவலமா இருக்கே! அவர் மேலே ஏதாவது நடவடிக்கை பாயுமா?

பட்டணம் : **ஆமாமய்யா; நீங்க கேக்கறது சரி தான். ஆனா நடவடிக்கையாவது...பாயறதாவது... வேணும்னா ப்ரமோஷன் கொடுத்து, "இட்டுக்குனு வா.. கூட்டிக்கினு போறேன்" (புஸ்ஸி) பக்கத்துலே உட்காரவெச்சாலும் ஆச்சர்யமில்லை!**